மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

08.09.2022 வியாழக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பு

## மட்டக்களப்பில் இருவருக்கு இராஜாங்க அமைச்சு




புதிய அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். அதன்படி இன்று பதியேற்ற 37 புதிய இராஜாங்க அமைச்சர்களின் விபரம் பின்வருமாறு,

02



## சமந்தா பவர் 10ஆம் திகதி இலங்கைக்கு விஜயம்



சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிறுவனத்தின் தலைவரும் அமெரிக்க இராஜ தந்திரியுமான சமந்தா பவர் நாளை மறுதினம் (சனிக்கிழமை) இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவர் இரண்டுநாட்கள் இலங்கையில்தங்கவுள்ளதுடன், அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் எதிர்க்கட்சி பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

## இலங்கைக்கு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்திய நாடுகள்

நெதர்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் இலங்கைக்கு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன. இதனால், 11 நாடுகள் இலங்கைக்கான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன. கிரேட் பிரிட்டன், சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், அவுஸ்ரேலியா, டென்மார்க், நோர்வே, சுவீடன், கனடா மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகள் இலங்கைக்கு விதித்திருந்த பயணக் கட்டுப்பாடுகளை முன்னதாக தளர்த்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம் குடிமக்கள் வேட்டையை உடனே நிறுத்து



இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைஞர்கள் போன்றவர்களை அரசாங்கம் வெறுப்பதாகவும் அவர்களைக் கண்ட இடத்தில் கைது செய்வதற்கு அரசாங்கம் சிந்தித்து வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரச மிலேச்சத்தனம் மற்றும் அரச வன்முறைகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மக்களுடன் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக போராடும் எனவும் அவர் குறிப்பிட்டார். கலைஞர் தமிதா அபேரத்னவுக்கு 9 ஆம் திகதியே பொலிஸில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் ஆனால் அவர் தியத உயன போராட்டத்தில் ஈடுபட்ட போது உடன் கைது செய்யப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். தமிதாவை பார்க்க சென்ற சஜித்! கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல நடிகை தமிதா அபேரத்னவின் நலன் விசாரிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (08) காலை கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்தார். கடந்த சில நாட்களாக போராட்டத்தின்

02

## வாழைச்சேனையில் 40 பவுண் தங்க ஆபரணம் கொள்ளை

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள யுனியன் கொலனி பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றின் யன்னல் கதவை உடைத்து அங்கிருந்த 40 பவுண் தங்க ஆபரணங்கள் 65 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்ற சம்பவம் இன்று வியாழக்கிழமை (8) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸரார் தெரிவித்தனர். குறித்த வீட்டில் தாயும் மகனும் இருந்துள்ள நிலையில் சம்பவதினமான நேற்று இரவு 12 மணிக்கு பின்னர் ஆழ்ந்த நித்திரையில் இருந்து காலையில் எழுந்திருந்தபோது வீட்டின் யன்னல் கிறிலை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள் அங்கு பை ஒன்றில் வைத்திருந்த 40 தங்க ஆபரணங்கள் 65 ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## 1996 வீடுகளை நிர்மாணிக்க ஜனாதிபதி திட்டம்



பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கூட குறைந்த செலவுடன் 75 ஆவது சுதந்திர தினத்தை தனித்துவமான, விசேட நிகழ்வாகக் கொண்டாட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சுதந்திர தின நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுதந்திர தினத்துடன் இணைந்ததாக ,குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 1996 வீடுகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பேலியகொட, தெமட்டகொட, மொரட்டுவ, மஹரகம மற்றும் கொட்டாவ பிரதேசங்களில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளன. கலைஞர்களுக்காக கொட்டாவ பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டமொன்று நிர்மாணப்படும். இந்த வீடுகளை அரசியல் தொடர்புகள் அல்லது சிபாரிசுகள் பேரில் வழங்குவதை முற்றாக தவிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. முன்னுரிமை மற்றும் சரியான தேவையின் அடிப்படையில் மாத்திரம் இந்த வீடுகளை உரியவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான பொறிமுறையொன்றை உடனடியாக தயாரிக்குமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

## மூன்றரை மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய புதிய நெல் கண்டுபிடிப்பு

மூன்றரை மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய புதிய நெல் வகையொன்று காலி – லபுதுவ அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தினால் கண்டறியப்பட்டுள்ளது. 12 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்த புதிய நெல் வகை கண்டறியப்பட்டுள்ளது 'எல்.டி 376' என பெயரிடப்பட்டுள்ள குறித்த நெல் வகையானது நாட்டின் எந்த பகுதியிலும் பயிரிட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீமெந்து, கம்பிக்கு நிர்ணய விலை

கட்டுமானத் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை உயர்வுகளை அடுத்து, சீமெந்து மற்றும் கம்பி போன்ற முக்கிய பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பது தொடர்பான பரிசீலனையை நுகர்வோர் விவகார அதிகாரசபை மேற்கொண்டு வருவதாக அறியமுடிகிறது. பொருளாதார ஸ்திரமின்மைக்கு மத்தியில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வர்த்தக

02



## இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பு

01. ஜகத் புஷ்பகுமார் – வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர்
02. ரஞ்சித் சியம்பலாபிட்டிய – நிதி இராஜாங்க அமைச்சர்
03. லசந்த அலகியவன்ன – போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்
04. திலும் அமுனுகம – முதலீடு மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர்
05. கனக ஹேரத் – தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்
06. ஜானக வக்கும்புர – மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்
07. ஷெஹான் சேமசிங்க – நிதி இராஜாங்க அமைச்சர்
08. மொஹான் பிரியதர்ஷன் டி சில்வா – விவசாய இராஜாங்க அமைச்சர்
09. தேனுக விதானகமகே –பொருளாதார அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்
10. பிரமித பண்டார தென்னகோன் – பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்
11. ரோஹன திஸாநாயக்க – விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர்
12. அருந்திக பெர்னாண்டோ – நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்
13. விஜித பேருகொட – கல்வி இராஜாங்க அமைச்சர்
14. லொஹான் ரத்வத்த – பெருந்தோட்டக் கைத்தொழில்
15. தாரக பாலசூரிய – வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்
16. இந்திக்க அனுருத்த – மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர்
17. சனத் நிஷாந்த – நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்
18. சிறிபால கம்லத் – நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்
19. சாந்த பண்டார – ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர்
20. அனுராத ஜயரத்ன – நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர்
21. சதாசிவம் வியாழேந்திரன் – கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்
22. சிசிர ஜெயக்கொடி – சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்
23. பியால் நிஷாந்த டி சில்வா – கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்
24. பிரசன்ன ரனவீர – சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் இராஜாங்க அமைச்சர்
25. டி.வி.சானக்க – வனவிலங்கு மற்றும் வன வளங்கள் இராஜாங்க அமைச்சர்
26. டி.பி.ஹேரத் – கால்நடை அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர்
27. சஷீந்திர ராஜபக்ச – நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்
28. சீதா ஆரம்பேபொல – சுகாதார இராஜாங்க அமைச்சர்
29. காதர் மஸ்தான் – கிராம அபிவிருத்தி அமைச்சர்
30. அசோக பிரியந்த – உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்
31. அரவிந்த குமார் – கல்வி இராஜாங்க அமைச்சர்
32. கீதா குமாரசிங்க – மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்
33. சிவநேசதுரை சந்திரகாந்தன் – கிராம வீதி அபிவிருத்தி
34. சுரேன் ராகவன் – உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்
35. டயானா கமகே – சுற்றுலா இராஜாங்க அமைச்சர்
36. சாமர தசநாயக்க – முதன்மை கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்
37. அனுப பஸ்குவல் – சமூக அதிகார இராஜாங்க அமைச்சர்

## சீமெந்து, கம்பிக்கு நிர்ணய விலை

அமைச்சருக்கு ஜனாதிபதி விடுத்த பணிப்புரைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சந்தையில் விலைகள் வேகமாக அதிகரித்து வருவதால் கட்டுமானத் துறையில் பல பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பதற்கும் அதிகாரசபை ஆராய்ந்து வருகிறது. 2021ஆம் ஆண்டு ஜ•ன் மாதம் முதல் 2022 ஜ•ன் வரை அரச மற்றும் தனியார் விநியோகஸ்தர்களால் விற்பனை செய்யப்படும் 50 கிலோகிராம் சிமெந்து மூடையின் சராசரி விலை 187 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜ•ன் மாதம் வரை 98 சதவீதம் அதிகரித்துள்ளதாக கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம்

பிரபல செயற்பாட்டாளராக இருந்த தமிதா அபேரத்ன தற்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வெளிரங்கமாக காட்டுவதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கேட்கும் அரசாங்கம்,அதற்கு மாறாக குடிமக்களை வேட்டையாடி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலைமையை வண்மையாக கண்டிப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கம் செய்ய வேண்டியது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதேயன்றி மக்களை வேட்டையாடுவதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

# சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையில் தாயக புலம்பெயர் தமிழர்கள் உறுதியாக இருக்க வேண்டும்

( வாஸ் கூஞ்ஞ)



இலங்கை அரச படைகளினால் முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் மேற் கொள்ளப்பட்ட இனப்படுகொலைகள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான போர்க்குற்றங்கள் சர்வதேச சட்டங்களுக்கும் அதன் சர்வதேச நீதிப் பொறிமுறைகளுக்கும் அமைவாகவே விசாரிக்கப்பட வேண்டும் இதன் மூலமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்கும் மாறாக குற்றம் இழைத்த தரப்பான இலங்கையை உள்ளக விசாரணையில் விசாரித்தல் என்பது பாதிக்கப்பட்ட தரப்பை ஏமாற்றும் செயல் ஆகும். சர்வதேச நியமங்களுக்கு அமைவான குற்றங்களை அதற்கான சட்டங்கள் இல்லாத நீதித்துறைக் கொண்ட இலங்கையின் நீதித் துறையில் விசாரித்தல் என்பது நீதியானது அல்ல அத்துடன் குற்றம் இழைத்த தரப்பே தாங்களை தாங்கள் விசாரித்தல் உலக ஒழுங்கில் மிகவும் வேடிக்கையான விடையம்.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான நீதியை வழங்கவும் மீள் நிகழாமையை உறுதி செய்யவும் பரிகார நீதியை பாதிக்கப்பட்ட இனம் பெற்றுக் கொள்ளவும் மிகப் பொருத்தமான பொறிமுறை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் விசாரணைப் பொறிமுறையே ஏற்புடையது. ஆகவே பாதிக்கப்பட்ட தரப்பைச் சார்ந்த தாயக புலம்பெயர் தமிழர்கள் தொடர்ந்து சர்வதேச விசாரணைப் பொறிமுறை வேண்டும் என்ற கோரிக்கையை மனிதவுரிமைப் பேரவையில் அங்கம் பெறும் கோ குறூப் நாடுகளின் பிரதி நிதிகளிடமும் அதனை வழி நடத்தும் நாடுகளிடமும் முன் வைத்து ஒரே நிலைப்பாட்டை தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் . உள்ளக நீதி விசாரணை என்பதை பாதிக்கப்பட்ட தரப்பு ஏற்றுக் கொள்ளவில்லை என்ற நிலைப்பாட்டை சர்வதேச நாடுகளுக்கும் அமைப்புக்களுக்கும் தொடர்ந்து தமிழர் தரப்பு உறுதி செய்ய வேண்டும் இத காலத்தின் கட்டாயம் அதுவே சர்வதேச நீதிக்கான கதவுகளைத் திறக்கும்.

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற பனிக்கனார் குடி மக்களின் திருவிழா







வரலாற்று சிறப்புமிகு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் பனிக்கனார் குடி மக்களின் திருவிழா இரவு (07.09.2022) இடம்பெற்ற போது..

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022 தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# முன்னிரவிலே கிராமத்தினுள் புகுந்த காட்டுயானைகள்



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள போரதீவுப் பற்றுப் பிரதேசசெயலாளர் பிரிவுக்குப்பட்ட தும்பங்கேணி இளைஞர் விவசாயத்திட்டம் எனும் கிராமத்தில் புதன்கிழமை(07) இரவு 8 மணியளவில் இரண்டு காட்டு யானைகள் புகுந்ததனால் அக்கிராமத்து மக்கள் மிகுந்த அல்லோலகல்லோலப் பட்டுள்ளார்கள். இதனால் தீப்பந்தம் ஏந்தியும், பட்டாசு கொழுத்தியும் யானைகளை விரட்டியுள்ளனர். எனினும், யானைகள் அங்கிருந்த தென்னை மரங்களையும் தள்ளி அழித்துவிட்டு ஒருவாறு யனைகள் நகர்ந்துள்ளது. யானைகள் கிராமத்தைவிட்டு நகர்ந்துவிட்டதாக நினைத்து மக்கள் உறக்கத்திற்குச் சென்றுள்ளனர். ஆனாலும் கிராமத்தை விட்டுள் சென்ற யானைகள் வியாழக்கிழமை(07) அதிகாலை 5 மணிக்கு மீண்டும் வந்துள்ளது. இதனால் மக்கள் மிகுந்த பீதியுடன், யானைகளை விரட்டியுள்ளனர்.

மிக அண்மைக்காலமாக அப்பகுதியில் காட்டுயானைகளின் தொல்லைகளும், அட்டகாசங்களும். அதிகரித்துள்ளன. எல்லைப்புறங்களைச்சுற்றி யானைப் பாதுகாப்பு வேலிகள் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துவருகின்ற போதிலும் அது இற்றைவரையில் கைகூடாத நிலையிலேயே அற்குள்ள மக்கள் வாழ்ந்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

# களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த நடேசன் கிருந்திஹறரன் உயிரியல் விஞ்ஞான பிரிவில் மாவட்ட மட்டத்தில் 3ஆம் இடம்



( ரக்ஸனா)

அண்மையில் வெளியாகிய 2021 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தர உயர்தரப் பரீட்சையில் மட்.பட்.பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடி யிலிருந்து, உயிரியல் விஞ்ஞான பிரிவில் தோற்றிய நடேசன் கிருந்திஹறரன் 2ஏ பி பெறுபேற்றை பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 3ஆம் இடத்தினை பெற்றுள்ளார். இவர் மட்.பட்.களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலய அதிபர் நா.நடேசன், ஆசிரியை திருமதி.ந.நித்தியானந்தி அவர்களின் மகன் ஆவார்.

இவர் தனது கல்வி கற்ற காலத்தில் பல திறமைகளை வெளிக்காட்டியுள்ளார். 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகளை பெற்றார். சிங்கப்பூரில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற **Fourteenth IMC International Mathematics Contest** போட்டிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவாகி கலந்து கொண்டார். மற்றும் **National Science Foundation** ஆல் நடத்தப்பட்ட **Science Research Projects Competition 2019/2020** இல் அவர் உள்ளடங்களான குழு **National Winners** ஆக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அது மட்டுமல்லாமல் வருடாந்தம் நடாத்தப்டும் **Social Scince Competition** இல் தொடர்ச்சியாக 2013, 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளில் **All Island** இல் 1ஆம், 3ஆம் இடங்களை பெற்றிருந்தமை குறிப்பிடதக்கது. மேலும் 2013, 2018 ஆம் ஆண்டுகளில் **National Mathematics Olympiad Competition**, தமிழ்த்தின பேச்சுப் போட்டி, அறிவிப்பாளர் போட்டி என பல போட்டிகளில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளார்.

பல துறைகளிலும் சாதனை படைத்த இவர் தற்போது மருத்துவ துறைக்கு தெரிவாகியமையையிட்டு பெருமிதம் கொள்வதோடு மருத்துவ நிபுணராக வர வேண்டும் என பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# சர்வதேச எழுத்தறிவு நாளை முன்னிட்டு திருகோணமலையில் நிகழ்வு



(அ . அச்சுதன்)

சர்வதேச எழுத்தறிவு நாளை முன்னிட்டு திருகோணமலை கல்வி வலயத்தின் விழிப்புணர்வுப் பேரணி இன்று திருக்கோணமலையில் நடைபெற்றது. இன்றைய நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளத்தக்க வகையில் நிலைபேரான கல்வி அபிவிருத்தியினை நோக்கிய மாணவர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு (2022.09.10) சர்வதேச எழுத்தறிவு நாளை முன்னிட்டு இன்று (08) திருகோணமலைக் கல்வி வலய முறைசாராப் பிரிவின் ஏற்பாட்டில் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. சிவானந்தம் சிறீதரன் அவர்களது தலைமையில் குறித்த பேரணி இடம்பெற்றது. இவ் விழிப்புணர்வுப் பேரணியில் தி௸தி௸ மாதுமை அம்பாள் வித்தியாலயம், தி௸ தி௸ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம் மற்றும் தி௸ தி௸ பாரதி தமிழ் வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் அடங்கலாக ஊர்வலமும், ஒன்று கூடலும் நடைபெற்று மற்றும் எழுத்தறிவின் அவசியத்தை வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு இருந்தது.

இன் நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டடனர்.

# அரச காணிகளை சட்ட விரோதமான முறையில் அபகரிப்பதாக முறைப்பாடு



க.ருத்திரன்

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிவிலுள்ள புணானை ,ஜெயந்தியாய மற்றும் றிதிதென்ன ஆகிய பிரதேசங்களில் புகையீரத பாதையை ஊடறுத்து செல்லும் அரச காணிகளை அப் பிரதேசங்களைச் சேர்ந்தோர் சிலர் சட்ட விரோதமான முறையில் அபகரித்து வருவதாக பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து அப் பிரதேசங்களுக்கு திம்புலாகல ராகுலாங்கார நாகினி தேரர் இன்று காலை (8) திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு நிலமைகளை அவதானித்தார்.

புணானை பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் சிலருடன் தேரர் குறித்த இடங்களுக்கு சென்று காணிகளில் கட்டடம் கட்டுவோர் மற்றும் சுற்று வேலி இடுவோரிடம் விடயம் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார். பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தொவிக்கும்போது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளை கவனத்தில் கொண்டு அரசானது சிறுதாணியப் பயிர் செய்கையினை ஊக்குவிக்கும் முகமாக நெடுங்சாலைகள் போக்குவரத்து அமைச்சின் கீழ் புகையிரத பாதையினை அண்மித்த நிலங்களை விவசாயத்தில் ஈடுபடச் செய்யும் முகமாக நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது. இவ்விடயம் தொடர்பாக அறிந்த மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்தோர் சிலர் காணிகளை பிடித்து தெண்ணை மரங்களை நாட்டியும்,கற்களைக் கொண்டு கட்டிடங்களை அமைத்து அரச கொள்கைக்கு எதிராக செயற்படுகின்றனர். அத்துடன் இப் பிரதேசங்களின் ஊடாகவே யானைகளின் போக்குவரத்து நடமாட்டங்கள் உள்ளன. இவர்களின் இவ்வாறான செயற்பாட்டினால் யானைகளின் வாழ்வியல் செயற்பாட்டிலும் பாதிப்பு ஏற்படும். எனவே அரசு இவ்விடங்களில் சட்டத்திற்கு விரோதமாக புகையிரத திணைக்களத்திற்குரிய காணிகளை அபகரிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினை நாடி சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேரர் இதன் போது தெரிவித்தார்.

அத்துடன் வருகை தந்த பொதுமக்கள் சிலர் இவ் காணி பங்கீடு தொடர்பில் பக்கச் சார்பில்லாமல் மூவின மக்களுக்கும் குறித்த காணியினை பங்கீடு செய்து வழங்கமாறு கேட்டுக்கொண்டனர். கடந்த ஒரு வார காலமாக புணானை தொடக்கம் றிதிதென்னை வரையுமான சுமார் 10 கிலோ மீற்றர் தூரமுள்ள காணிகள் அபகரிக்கப்படும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.இதனால் சட்ட ஒழுங்கை நடைமுறைப் படுத்துவதில் பொலிசார் குழப்பமடைந்து காணப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட புகையிரத திணைக்களமும் மௌனம் காத்து வருகின்றது

# கல்முனை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம்



( ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.றம்ஸீன் பக்கீர் தலைமையில் நேற்று (08) நடைபெற்றது. 156வது பொலிஸ் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற இந்த மருத்துவ பரிசோதனையின் போது பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களின் உடற் பரிசோதனை இங்கு முற்றிலும் இலவசமாக பரிசோதிக்கப்பட்டன.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மியின் வழிகாட்டலுக்கு அமைய பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் இதில் கலந்து கொண்டு தேவையான அறிவுறுத்தல்களை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்

கல்முனை பொலிஸ் நிலையத்தின் சமூக பாதுகாப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ.வாஹிட், சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எல்.றபீக் உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு

த.சுபேசன்

மக்களை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கும் முகமாக 07.09 புதன்கிழமை சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் மரக்கறி நாற்றுக்கள் மற்றும் மரக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் வேண்டுகோளிற்கு அமைவாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள்,பிரதேச செயலக சிறுவர் மேம்பாடு மற்றும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களுக்கு வீட்டுத்தோட்டச் செய்கைக்கான மரக்கறிக் கன்றுகள் மற்றும் நாற்றுக்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு வாகனேரியில் 100 நாட்கள் செயல்முனைவு




**வடமலை ராஜ்குமார்**

100 நாட்கள் செயல்முனைவு மக்கள் குரல் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேசத்திலுள்ள வாகனேரி பிரதேசத்தில் (06.09.2022) மக்களின் கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து முன்னெடுக்கப்பட்டது. இந் 100 நாட்கள் செயல்முனைவின் 37ம் நாள் போராட்டத்தில் உரிய வானனேரி பிரதேச பெண்கள், பெண்கள் வலையமைப்பு உறுப்பினர்களள் சிறுகுழுக்களின் உங்கத்துவர்கள் ஆண்கள் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" " நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம் " " வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் " " 13 வது திருத்தச்சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது " பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்" எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, என பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

எமது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் வடக்கு கிழக்கு பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு நீதியுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டி முன்னெடுக்கப்படும் ஜனநாயகப் போராட்டங்களுக்கு பெரும் சவாலாக இலங்கை அரச படைப்பிரிவினரும், இலங்கை படைப்பிரிவுகளின் புலனாய்வினர்களும் செயற்படுவது ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் செயலாகவே நாம் கருதுவதுடன், பாதிக்கப்பட்ட மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களின் உரிமைக்கான குரல் வளையை நசிக்கும் செயலாகவே நாம் இதனை கருதுவதுடன், இவ்வாறான செயல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் எமது "வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் ஜனநாயக ரீதியான மக்கள் குரலுக்கு மேன்மை தங்கிய இலங்கை சனாதிபதி அவர்கள் உதவ வேண்டும் எனவும் கோருகின்றோம்.

# பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் இருந்து தொலைபேசியூடாக அச்சுறுத்தல்



**(சுமன்)**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெறும் தருவாயில் கூட இங்கை அரசின் அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் எல்லையில்லாமல் தொடருகின்றன என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தெரிவித்தார். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் இருந்து தொலைபேசி அழைப்பினூடாக அச்சுறுத்தல் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று பிற்பகல் 02.40 மணியளவில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவில் இருந்து கதைப்பதாக ஒரு அழைப்பு வந்தது. எங்கள் ஜனநாயகப் பேராளிகள் கட்சி தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கட்சியின் தலைவர், செயலாளரின் விபரங்களைத் தருமாறும் கேட்கப்பட்டது. அப்போது நான் அழைப்பெடுத்தவர் தொடர்பில் கேட்கையளில் அது சொல்ல வேண்டிய அவசியமில்லை என உரத்த தொனியில் கூறப்பட்டது. அத்துடன் எங்கள் கட்சியின் தலைவர், செயலாளரின் தொடர்பிலக்கம் தருமாறு கூறப்பட்டது.

இதேவேளை அவர் தொலைபேசி உரையாடலின் பண்பினைக் காட்டாவிட்டலும் எங்கள் கட்சிக்கும், எமக்கும் உரித்தான பண்பின் அடிப்படையில் எங்கள் மடியில் எவ்வித கனமும் இல்லாத காரணத்தினால் எங்கள் கட்சியின் தலைவர், செயலாளரின் தொடர்பிலக்கத்தைத் தருவதாகத் தெரிவித்திருந்தேன். அதன் பிற்பாடு அவர்களின் பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை விபரம் என்பன கேட்கப்பட்டது. அதற்கு அவைகளெல்லாம் என்னிடம் இல்லை தொலைபேசி இலக்கம் தரப்பட்டுள்ளது. அதனூடாகத் தொடர்பு கொண்டு அவர்களிடமே பெற்றுக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தேன்.அதன் பிற்பாடு மிகவும் எச்சரிக்கையானதும், அச்சறுத்தும் விதமானதுமான வார்த்தைப் பிரயோகங்கள் அந்தத் தொலைபேசியினூடாக வந்தது. உங்களை நாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டிய இடத்தில் பார்த்துக் கொள்வோம். அழைக்க வேண்டிய இடத்தில் உங்களை அழைத்தால் தான் சரி என்றவாறெல்லாம் மிரட்டல்கள் இடம்பெற்றன.

இவ்விடயம் தொடர்பில் எங்கள் கட்சியின் தலைமைகளுடன் கலந்தாலோசித்துள்ளோம். இது தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொலைபேசி அழைப்பெடுத்தால் எவ்வாறு கதைப்பதென்ற அடிப்படை பண்பு தெரியாமல் கூட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்களா? இவ்வழைப்பானது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் இருந்துதான் மேற்கொள்ளப்பட்டதா? என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளன. எவ்வாறாயினும் அழைப்பு வந்த தொலைபேசி இலக்கம் கொண்டு இச் சந்தேகங்களை நிவர்த்திக் முடியும். நாங்கள் போராளிகளாக இருந்து தற்போது ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து எவ்வித பிணக்குகளும் இன்றி ஒரு அரசியற் கட்சியாக பரினமித்து சுமார் 10 வருடங்களைக் கடந்த நிலையில் இன்னும் இன்னும் இந்த அரசாங்கத்தினாலும், அரச பாதுகாப்பு படைகளினாலும் அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

கடந்த வருடம் முகநூல் விடயமொன்றினை பூதாகாரமாக்கி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாக எமது கட்சியின் ஒருங்கிணைப்பாளர் கைது செய்யப்பட்டு அண்மையில் தான் விடுவிக்கப்பட்டார். அது மட்டுமல்லாது பயங்கரவாதத் தடப்புப் பரிவு, குற்றத்தடுப்புப் பிரிவு போன்றவற்றிலெல்லாம் எங்களை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எத்தனை விசாரணைகள் எத்தனை அச்சறுத்தல்களை சந்தித்த போதும் அவை குறைந்தபாடில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெறும் தருவாயில் கூட இங்கை அரசின் அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் எல்லையில்லாமல் தொடருகின்றன. முன்பெல்லாம் கடிதங்கள் கொடுக்கப்பட்டு விசாரணைக்கு அழைக்கப்படுவோம். ஆனால் தற்போது தொலைபேசியில் எடுத்து அச்சுறுத்தி தகவல்கள் பெறுமளவிற்கு ஜனநாயகம் மலிந்து விட்டது.

இந்த நாட்டிலே எமது இனத்திற்காக போராடி போராட்டத்தின் வலி அறிந்தவர்கள் எமது போராளிகள். அவர்களின் வலிகளை ஒருபோதும் இந்த அரசாங்கம் புரிந்து கொள்ளாது. புரிந்து கொள்ளப் போவதும் இல்லை. ஆனாலும் வடுக்களை சுமந்துகொண்டிருக்கும் எம்மை மீண்டும் மீண்டும் ரணப்படுத்த வேண்டாம் என்பதை நாங்கள் வன்மையாகத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று தெரிவித்தார்.

# சௌபாக்கியா விசேட வீடுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு



**இ.சுதா**

2022ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் சமுர்த்தி சௌபாக்கியா விசேட வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு களுதாவளை-03 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 2022.09.07ம் திகதி புதன்கிழமை பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி. புவனேஸ்வரி ஜீவகுமார், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. கே.உதயகுமார், மாங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் திரு.எஸ்.ஆனந்தமோகன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. விக்னேஸ்வரி சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் வீட்டுத் திட்டத்திற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ரூபா 650,000 வழங்குகின்றது. மிகுதித் தொகை சமுர்த்தி பயனாளியின் பங்களிப்புடனும், கிராமத்தில் உள்ள தனவந்தர்களின் உதவியைப் பெற்றும் ரூபா 1000,000 பெறுமதியான வீட்டினை நிர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலை தெரிவான தெ லெஜன்ட் கல்லூரி மாணவர்கள் கௌரவிப்பு



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

இம்முறை வெளியான கா.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய தெ லெஜன்ட் கல்லூரி மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பேருவளை தெ லெஜன்ட் கல்லூரியில் இடம்பெற்றது. தெ லெஜன்ட் கல்லூரியில் கல்வி கற்று (2021ஃ2022) க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய கணிதம், விஞ்ஞானம் மற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களில் அதிகமானோர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர். இதில் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த இபாதா இம்தியாஸ் எனும் மாணவி கணிதத் துறையில் தமிழ் மொழி மூலம் தோற்றி 3**A (Merit Pass) (Z-Score 2.4180)** சித்திகளோடு மாவட்ட ரீதியில் 10ஆம் இடத்தினைப் பெற்று தனது பெற்றோருக்கும் தெ லெஜன்ட் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தெ லெஜன்ட் கல்லூரியின் பணிப்பாளர் அஸ்ரி ஆப்தின் தலைமையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய ஏனைய மாணவர்களும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது இக் கல்வி நிறுவனத்தின் நிருவாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# காத்தான்குடி மீராபாலிகா மாணவிகள் கிழக்கு மாகாண மட்ட சதுரங்க போட்டியில் சாதனை



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

காத்தான்குடி மட்ஃமமஃ மீராபாலிகா மகா வித்தியாலய தேசிய பாடசாலை மாணவிகள் கிழக்கு மாகாண மட்ட சதுரங்க போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டதை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (06) பாடசாலையில் நடைபெற்றுள்ளது. பாடசாலை அதிபர் யூ.எல். மன்சூர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் முதர்ரிஸ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

கிழக்கு மாகாணத்தின் பல முன்னணி பாடசாலைகள் கலந்துகொண்ட இப்போட்டியில் போட்டியிட்ட ஏனைய பாடசாலைளை மீராபாலிகா மாணவிகள் வென்றுள்ளனர். மாகாணத்தில் முதலிடம் பெற்ற மட்டக்களப்பு புனித சிசிலியா கல்லூரி மீராபாலிகா மகா வித்தியாலயத்தை விட அரைப் புள்ளி (தசம் ஐந்து) அதிகம் பெற்று முதலிடத்தை தட்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. சாதனை படைத்த மாணவிகள் அஸ்ஸெய்யித் ஜெயின் மௌலானா பள்ளிவாயல் முன்றலில் இருந்து பாடசாலை வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பின்னர் பாடசாலையில் வைத்து பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

# மாவட்ட மட்ட ஊடகர்களுக்கான செயலமர்வு




**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்ட பிரதேச ஊடகர்களுக்கான அனர்த்த நடவடிக்கைகளின் போதான அதன் செயற்பாடுகளை செயற்திறனாக்குதல் தொடர்பான செயலமர்வு திருகோணமலையில் இடம் பெற்றது. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த செயலமர்வானது திருகோணமலை ஜேகப் பார்க் ஹோட்டலில் இடம் பெற்றது. நாடளாவியரீதியில் அதிகரித்துச் செல்லும் அனர்த்த அபாயங்களை செயற்திறனுடன் கையாள்வதன் மூலம் பொது மக்களின் உயிர்கள் மற்றும் உடைமைகளை பாதுகாப்பது அனர்த்த முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் . பொது மக்களுக்காக அனர்த்த நிலைமையின் போது தகவல்களை வழங்கி எவ்வாறு செயற்படுவது தொடர்பிலும் இதன் போது தெளிவூட்டப்பட்டது. திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம கலந்து சிறப்பித்தார்.

இதில் அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் கே.சுகுனதாஸ், அனர்த்த முகாமைத்துவ பயிற்சி பிரிவின் பணிப்பாளர் சுகத் திசநாயக்க, வேர்ல்ட் விசன் முகாமையாளர் ரவீந்திரன், வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி டுலாரி பெர்னாந்து ,நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் மற்றும் 30 க்கும் மேற்பட்ட பிரதேச ஊடகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

## காண வாரீர்!

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்



# றாணமடு இந்துக் கல்லூரி பெண்கள் கபடி அணியினர் தேசியமட்டத்திற்குத் தெரிவு



**எஸ்.சபேசன்**

சம்மாந்துறை கல்வி வலயத்திற்கு உட்பட்ட றாணமடு இந்துக்கல்லூரி மாணவர்கள் பெண்களுக்கான கபடிப் போட்டியில் தேசியமட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அதிபர் கே.கதிரைநாதன் தெரிவித்தார். கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நடாத்தி வரும் விளையாட்டு போட்டிகளில் கபடி போட்டியில் றாணமடு இந்து மகா வித்தியாலய கபடி அணி மாகாண சாம்பியனாகி அகில இலங்கை ரீதியிலான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் ஒருபெருவிளையாட்டானகபடிவிளையாட்டு போட்டி நிந்தவூர் அஷ்ரக் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை மைதானத்தில் ) நேற்று முன்தினம் நடைபெற்றது. 20வயதுப் பெண்களுக்கான பிரிவில், சம்மாந்துறை றாணமடு இந்துக் கல்லூரி மாணவிகள் போட்டியில் கலந்து கொண்டு மூசாம்பியனாக ஆக தெரிவு செய்யப்பட்டுளார்கள். வெற்றி பெற்ற அணிக்கு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம்.அமீர், உடற்கல்வி உதவி கல்வி பணிப்பாளர் ஏ.முஸ்ரக்அலி மற்றும் அப்பிரதேச பொது அமைப்புக்கள் உட்பட பலர் வாழ்த்துக்களையும்இ பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

# நாட்டைக் கொள்ளையடித்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி வரிச்சுமையை குறைக்கவும்

**( வாஸ் கூஞ்ஞ)**

வறிய மக்கள் மீது மேலும் மேலும் வரிச்சுமையை திணிக்காமல் நாட்டைக் கொள்ளையடித்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அதன் மூலம் வரிச்சுமையை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது என நல்லாட்சிக்கான தேசிய முன்னனி தேசிய அமைப்பாளர் பி.எம்.முஜிபுர் றகுமான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



நல்லாட்சிக்கான தேசிய முன்னனி தேசிய அமைப்பாளர் பி.எம்.முஜிபர் றகுமான் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது தற்போதைய அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் வரிவிதிப்பு முறைமைபலமடங்காகஅதிகரித்துள்ளது.இது நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித்தருவதாகச் சொல்லி மன்னராட்சிக் காலத்தில் மக்களைக் கொள்ளையடிப்பது போல் வரிவிதித்துள்ளது.

ஏழை எளிய மக்கள் உள்ளிட்ட அனைவரையும் சூறையாடுவது போன்றே இத்திட்டம் உள்ளது. எனவே இந்த மனிதாபிமானமற்ற வரி விதிப்பு முறைமையை அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்புக்கான விலையேற்றம் பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் அப்பாவி மக்களை தண்டித்தல் போன்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசாங்கம் ஒரு கொடுங்கோல் ஆட்சி போல் வரி வருவாயை ஈட்டி வருகின்றது. தனி மனித முதலாளிகளைப் போன்று அரசு கொடுமையான வரியை விதித்து பொதுமக்களை எல்லையற்ற சுரண்டலுக்கு ஆளாக்கியுள்ளது.

எரிபொருள் ஒரு நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையிலும் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் இன்றியமையாப் பங்கு வகித்து வருகிறது. உணவுப் பொருட்கள் பருப்பு வகைகள் வித்து வகைகள் காய்கறிகள் பால் பழம் கிழங்கு வகைகள் என்பவற்றின் விலையேற்றத்தால் மக்கள் கடுமையாக பாதிப்படைகின்றனர் அதேபோல் பெருமளவு மருந்து வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. கர்ப்பினித் தாய்மார்களுக்கு வழங்கக் கூடிய மருந்து வகைகளும் நாட்டில் இல்லாத நிலமை காணப்படுவதால் மந்தபோஷாக்கான சிறுவர்கள் பிறப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதாக வைத்தியர்களும் ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பும் எதிர்வு கூறியுள்ளது.

அத்தோடு நாட்டில் மனநோயாளிகள் அதிகரிக்கலாம் ஏனெனில் அவர்களுக்கென வழங்குகின்ற மருந்துகளுக்கும் பாரிய தட்டுப்பாடுகள் காணப்படுவதாக கூறப்படுகின்றது.'மேலும் கடந்த வருடம் விவசாயத்திற்கு உரப் பயன்பாட்டில் ஏற்பட்ட கொள்கை மாற்றத்தினால் நாட்டின் நெல் மற்றும் ஏனைய தாணிய உற்பத்தி பாரிய வீழ்ச்சி கண்டது. அதேபோல் தற்போது நிறைவடைந்த சிறுபோக நெல் மற்றும் தாணிய உற்பத்தியும் போதிய உரப் பயன்பாடு இன்மையால் வீழ்ச்சி கண்டது. மீண்டும் பெரும்போக விவசாய காலம் ஆரம்பிக்கின்றது.

இதன்போதாவது விவசாயிகளுக்கு போதிய உரங்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி நாட்டு மக்களின் உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யலாம் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நம்புகிறது. எனவே விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வேண்டுகோள் விடுக்கின்றது. அதாவது எரிபொருள் விலையேற்றம் அதன்மீது விதிக்கப்படும் அளவிலா வரிவிதிப்பு ஆகியவற்றால் மேற் சொன்ன அனைத்து விடயங்களிலும் விலை ஏற்றம் பொருளாதார நிலையில் ஓரளவு தன்னிறைவு பெற்றோர் வளமான நிலையில் இருப்போருக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் எழை எளிய மக்களின் உணவுப் பொருட்களான அரிசி மாவு பருப்பு காய்கறிகள் பால் போன்றவற்றின் விலைவாசி ஏற்கெனவே அதிகமாக உள்ள நிலையில் மேலும் கடும் வரியுடன் கூடிய எரிபொருள் மின்சாரம் தொலைத்தொடர்பு என்பவற்றின் விலையேற்றம். அவர்களின் நாள் கூலியைக் கரையான் போன்று அவர்கள் உணராமலே அரித்து வறியவர்களை நாளாந்தம் வறுமையின் பிடிக்குள் தள்ளிவிடுவதற்கான முறையாகவே நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நோக்குகிறது. எனவே நாட்டைக் கொள்ளையடித்து நாட்டை வறுமையிலும் வறுமை நிலைக்குக் கொண்டு சென்றவர்களை பாதுகாத்து அவர்களுக்கு சுகபோக வாழ்க்கையை வழங்குவதை உடனடியாக நிறுத்தி அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி கொள்ளையடித்த சொத்துக்களை அரசுடமையாக்கி மக்களின் வரிச்சுமையை குறைத்து மக்களின் நாளாந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வழிவகுக்க வேண்டும் என அரசாங்கத்திடம் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வேண்டுகேள் விடுத்'துள்ளது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த
கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# சதுரங்கத்தில் மீண்டும் சம்பியனானது கல்முனை சாஹிரா



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

இவ்வாண்டு (2022) பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியின் சதுரங்க (**Chess**) போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை 1ஆம் இடத்தைப்பெற்று மீண்டும் சம்பியனாகத் தெரிவாகி பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் எம்.ஐ.ஜாபிர் தெரிவித்தார். இவ்வெற்றிக்காக முயற்சி செய்த அனைவருக்கும் தனது நன்றியையும் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். இந்த மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியானது கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

சுமார் 12 வருடங்களின் பின் கல்முனை சாஹிராக் கல்லூரியில் இடம்பெற்ற மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமான சதுரங்க (**Chess**) போட்டி கல்லூரியின் காரியப்பர் மண்டபத்தில் செப்டம்பர் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் கல்முனை ஸாஹிராக் கல்லூரி 1ஆம் இடத்தைப்பெற்று சம்பியனாகவும், 17 வயதிற்குட்பட்ட பிரிவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டதோடு, தேசியமட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்கும் வலயத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ளனர். மேலும் தனிதிறமைக்கான (**Board Champion**) தெரிவில் 20 வயதிற்குட்பட்ட பிரிவில் ஏ.எச். எம்.ஏ.சிமாம், எம்.எச்.எம்.நுஸ்ரத் மற்றும் எம்.ஏ.ஏ.அத்தீப் ஆகிய மாணவர்களும், 17 வயதிற்குட்பட்ட பிரிவில் எம்.ஏ.தமீம், எம்.இஸட்.எம்.சனீப் ஆகிய மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும், மாணவர்ளுக்குப் பயிற்சியளித்த பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.சாகிர், மாணவர்களை வழிப்படுத்திய சதுரங்க பொறுப்பாசிரியர் எம்.வை.எம்.ரகீப், கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் (**SLEAS**), ஆகியோருக்கு பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றனர்.

# உயர்தர முதலுதவிப் பயிற்நெறி ஆரம்பம்



**(ரக்ஸனா)**

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் அடிப்படை முதலுதவிப் பரீட்சையில் சித்தி பெற்ற தொண்டர்களுக்கு உயர்தர முதலுதவிப் பயிற்சி நெறி வியாழக்கிழமை(08) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மட். கிராங்குளம் சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக்கிளையின் தலைவர் த.வசந்தராசா, செயலாளர் சா.மதிசுதன், பொருளாளர் வ.சக்திவேல், சங்கத்தின் சுகாதாரக்குழுத் தலைவர் ந.தயாகரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். தொடர்ந்து 6 நாட்கள் நடைபெறவுள்ள இப்பயிற்றி நெறியைப் பூர்த்தி செய்த தொண்டர்களுக்கு எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி நடைபெயவுள்ள உயர்தர முதலுதவிப் பரீட்சையில் தோற்றவுள்ளர். அப்பரீட்சையில் சித்திபெறும் தொண்டர்கள் பயிலுனர் பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்படுவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இப்பயிற்சி நெறியை முதலுதவிப் போதனாசிரியர்களான ஆ.சோமசுந்தரம், ச.கணேசலிங்கம் ஆகியோர் பயிற்றுவிக்கின்றனர்.

# கிழக்கு மாகாணத்தில் திருக்கோவில் பிரதேச செயலகம் முதலிடம்



**( வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்தில் காணிப் பத்திரங்கள் வழங்கலில் திருக்கோவில் பிரதேச செயலகம் முதலிடம் பெற்றுள்ளது. இதனை பாராட்டு முகமாக கிழக்கு மாகாண காணி ஆணையாளர் தசநாயக்க நேரில் விஜயம் செய்து பாராட்டினார். அச்சமயம், அங்கு திருக்கோவில் பிரதேசத்தில் காணி ஆவணங்கள் பெற்றுக் கொள்ளாத மக்களுக்கான காணி ஆவணங்கள் கையளிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்விலும் கிழக்கு மாகாண காணி நிருவாக திணைக்களத்தின் மாகாணக் காணி ஆணையாளர் டிஎம்ஆர்சி. தசநாயக பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு 362 பயனாளிகளுக்கு காணி ஆவணங்களை வழங்கி வைத்தார். கடந்த 2020 மற்றும் 2021ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் கிழக்கு மாகாண பிரதேச செயலகங்களில் அதி கூடிய காணி ஆவணங்களை தாயாரித்த பிரதேச செயலகமாக, திருக்கோவில் பிரதேச செயலகம் இருந்ததாக கிழக்கு மாகாண காணி ஆணையாளரால் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது. இந் நிகழ்வு திருக்கோவில் செயலகத்தின் காணிப்பிரிவு உத்தியோத்தர் லோஜினி அம்மணிஏற்பாட்டில் நடைபெற்றது.

மேலும் இவ்வாறான மிகச்சிறந்த அடைவினை பெற்றுக் கொண்டமைக்காக பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர் , காணி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட காணிப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு மாகாண காணி நிருவாக திணைக்களத்தினால் மெச்சுரைக்கான பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான முன்னின்று உழைத்த கிராம சேவை உத்தியோகத்தர்களும் பாராட்டப்பட்டனர். இந் நிகழ்வில் கிழக்கு கிழக்கு மாகாண காணி நிருவாக திணைக்களத்தின் உதவிக் காணி ஆணையாளர் க.ரவிராஜன், திருக்கோவில் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் க.சதிசேகரன், காணி நிருவாக திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட தலைமை காணி உத்தியோகத்தர் எம் ஐஎம்.முஸம்மில் நிருவாக உத்தியோத்தர் எம்.மோகனராஜா,கிராமசேவையாளர்களின் நிருவாக உத்தியோகத்தர் .கந்தசாமி,நிருவாகபிரிவில் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சசிந்திரன் காணிபிரிவு உத்தியோகத்தர் கோவிந்தசாமி ஆகியோரும் காணிபிரிவு உத்தியோகத்தர்கள் உட்பட திருக்கோவில் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். மேலும் இவ்வாறன முதல் நிலை அடைவுமட்டத்துக்கு கொண்டு சென்ற அனைத்து தரப்பினர்களுக்கும் பிரதேச செயலாளர் நன்றிகளை தெரிவித்தார்..

# சிறப்பாக நடைபெற்ற அட்டப்பள்ளம் சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்





**(வி.ரி. சகாதேவராஜா)**

நிந்தவூர் ,அட்டப்பள்ளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ச மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கிரியைகளை சிறப்பாக நடாத்தினார்கள். ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர். அதற்கு முன்னோடியாக , கடந்த சனி, ஞாயிறு தினங்களில் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வுஇடம் பெற்றது. காலை 10 மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரை இடம்பெற்றது. திங்கட்கிழமை காலை 6 .54 மணி முதல் 7. 31 மணி வரை உள்ள சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக இடம் பெற்றது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து தற்போது மண்டல அபிஷேக பூசைகள் நடைபெறுகின்றன.